1987 ஏப்ரல் 28]

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு ஆய்வு செய்து முடிந்த பிறகுதான் சரியான மதிப்பீட்டைச் சொல்ல முடியும். இந்த அணை கட்டுவோம் என்று சொன்னால், வருடத்திற்கு 105 மில்லியன் கன அடி நீரைப் பயன்படுத்த முடியும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதே போன்று, இந்தத் திட்டத்தினால் 910 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதியும், 839 இடைவெளி நிலங்களுக்கு பாசன வசதியும் கிடைக்கும் என்ற குறிப்பு இங்கே இருக்கிறது. வேகமாக ஆய்வை முடிப்பதற்கு வேண்டிய அந்த முயற்சியை மேற்கொள்ள அதிகாரிகளுக்குச் சொல்லி இருக்கிறோம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தென்காசி தொகுதியில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையும் இருக்கிறது. இப்போது புதிய தேசிய நீர் வளத் திட்டத்தின் அடிப்படையில் எந்த ஒரு புதிய அணை கட்டினாலும் அதிலே 15 சதவிகிதம் தண்ணீரைக் குடிநீருக்காக உபயோகிக்கவேண்டும் என்று தேசிய அளவில் ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இந்தத் திட்டத்தின் மூலமாக அந்தப் பகுதியிலே குடிநீருக்கு வாய்ப்பு ஏற்படுமா? அப்படி என்றால், அதன் மூலமாக எத்தனை இலட்சம் மக்கள் பயன்படுவதற்காக திட்டத்திலே வரையறுக்கப் பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே இப்போது குடிநீருக்காக எந்தக் குறிப்பும் இல்லை. அப்படி கோரிக்கை வருமென்று சொன்னால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம் பேராம்பூர் பெரியகுள பாசன வாய்க்கால்.

533—(*வினா எண் 12364) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1987 ஏப்ரல் 28

குளத்தூர் தொகுதி, விராலி மலை ஒன்றியம் போரம்பூர் பெரியகுள பாசன வாய்க்கால்களுக்கு சிமெண்ட் தளம் அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பெரியகுள பாசன கால்வாய்க்கு சிமெண்ட் தளம் அமைக்கும் பணி மேற்கொள்ள வாய்ப்பில்லை.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போரம்பூர் பெரியகுளம் கடந்த 40 ஆண்டுகளாக வறட்சிப் பணியிலோ அல்லது வேறு எந்தப் பணியிலுமோ மண் மராமத்து செய்யப்படவில்லை என்பதோடு வாய்க்கால்களும் செப்பனிடப்படவில்லை. அதனால், குளமும் மேடிட்டு, வாய்க்கால்களும் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின்கீழ், ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், அருள்கூர்ந்து இந்த ஆண்டே எடுத்து பணி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன ஆண்டிலே புதுக்கோட்டை மாவட்டத்திலே மட்டும் 20 கண்மாய்களை ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின்கீழே எடுத்து வேலை செய்திருக்கிறார்கள். அப்போது இந்தக் கண்மாய் விடுபட்டிருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆண்டில் அந்தக் கண்மாயை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் அந்தப் பணியை எடுத்துச் செய்வதோடு, வரத்துவாரிகளும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதால் தண்ணீர் வரத்து மிகவும் குறைந்து போய்விட்டது. ஆகவே, நீர்க் கொள்ளளவை அதிகரிக்கச் செய்ய, வரத்துவாரிகளைச் செப்பனிட்டுத் தருவதோடு, இரு கரைகளிலும், கரையின் இரு புறங்களிலும் அலகுகள் கட்டித் தரப்படுவதோடு.

1987 ஏப்ரல் 28]

தயைகூர்ந்து இந்த ஆண்டில் அந்தப் பணியை எடுக்க, பரிசீலிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவர்கள் சொல்வதைப் போல, ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் கீழே வாத்துக் கால்வாய்களைச் சரி செய்து கொடுப்பது, அதே போன்று பலவீனமாக இருக்கிற கரைகளை அந்தப் பகுதியிலே ரிவெட்மென்ட் போட்டு பலப்படுத்தியும், அதேபோன்று ஸ்லூயிஸ்களை எல்லாம் மாற்றிக் கொடுப்பதோடு, வாய்க்கால்கள் அத்தனைக்கும் சிமென்ட் தளம் போட்டுக் கொடுப்பதும்தான் அந்தத் திட்டத்தினுடைய குறிக்கோளாகும். ஆகவே, அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) காஞ்சிபுரம் ஒன்றியக் கிராமங்களில் குடிநீர் இணைப்பைத் துண்டிப்பது குறித்து.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால் காஞ்சிபுரம் ஒன்றியத்திற்கு ஓர் அரசாணை வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, கிராமங்களில் உள்ள வீடுகளில் குடிநீருக்காக இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த இணைப்பைத் துண்டிக்கவேண்டும் என்ற உத்தரவு வந்திருக்கிறது. வேண்டுமானால் இப்போதிலிருந்து புதிதாகக் கொடுக்கக்கூடாது என்ற உத்தரவைப் போட்டு, ஏற்கனவே கொடுக்கப்பட்ட அந்த குழாய் இணைப்புக்களைத் துண்டிக்கக்கூடாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு உத்தரவு வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.